**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C)~~
~~(கு.வி.மு.ச. பிரிவு 154 இன் கீழ்)~~

**(Under Section.173 BNSS)**

C 8102170

1. District மாவட்டம் : Coimbatore | PS: காவல்நிலையம் : VBAC | Year: ஆண்டு : 2024 | FIR No.: மு.த.அ. எண் : 12/2024/AC CB | Date: நாள் : 24.10.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 | Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: 7(b), 7(b) r/w 12
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் : 23.10.2024 | Date to : நாள் வரை :
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் : 15.00 hrs | Time to : நேரம் வரை :
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 24.10.2024 | Time நேரம் : 13.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : GD-Vol-II | Time நேரம் : 13.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : at about 10 km, North East
   Beat Number : முறைக் காவல் எண் :
   (b) Address : முகவரி : O/o. Joint Director (Incharge), District Town and Country planning, Gandhi Ma Nagar, Coimbatore District
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : Tr. V.P. Chandran | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : S. Pattan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : | (d) Nationality : நாட்டினம் : Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : | Place of Issue : வழங்கப்பட்ட இடம் :
   (f) Occupation : தொழில் : Special Deputy Inspection Cell Officer | (g) Address : முகவரி : Coimbatore District Collectorate, Coimbatore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) Tr. R. Rajaguru, Assistant Director/Joint Director (Incharge), District Town and Country planning, Gandhi Ma Nagar, Coimbatore
   (2) Tr. V. Veera @ Ponnappan S/o. Veerakannu, Proprietor of Kovai Planners Xerox shop, No.3, Gandhi Ma Nagar Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted: Before the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Coimbatore.

Separate sheets enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt. M. Vijaya[illegible], I.A.S. [illegible] Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Coimbatore on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 24/10/24 | [signature] 24/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24.10.2024 @ 16.00 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Ezhilarasi,
Rank: நிலை Inspector of Police, No. ......
Vigilance and Anti Corruption
Coimbatore.
24.10.2024.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:-**

***கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 12/2024/AC/CB u/s. 7(b), 7(b) r/w. 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...***

இன்று 24.10.2024-ம் தேதி 13.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோயம்புத்தூர் மாவட்ட சிறப்பு துணை ஆய்வுக்குழு அலுவலா் திரு.V.P.சந்திரன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2024/AC/CB u/s. 7(b), 7(b) r/w.12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ஆக 14.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அந்த புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர், V.P.சந்திரன், தனி வட்டாட்சியர்/ உதவி பங்கீட்டு அலுவலர், சரகம்-1, சிறப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயம்புத்தூர். ந.க.எண்.210/2024/ஐ1, நாள்: 24.10.2024. திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம் - உதவி இயக்குநர் / இணை இயக்குநர் (பொறுப்பு), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காந்திமாநகர், கணபதி, கோயம்புத்தூர் - திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - மேல் நடவடிக்கைக்காக புகார் அளித்தல் - சம்பந்தமாக. 23.10.2024-ம் தேதி பகல் 01.00 மணியளவில், கோயம்புத்தூர் மாவட்டம் கணபதி காந்தி மாநகர், FCI சாலையில் அமைந்துள்ள உதவி இயக்குநர் / இணை இயக்குநர் (பொறுப்பு), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மேற்படி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு கட்டிட அனுமதி, மனைப்பிரிவு அனுமதி மற்றும் நிலப்பயன்மாற்ற அனுமதி பெறுவதற்கு வருகை தரும் பொதுமக்களிடமிருந்தும்,

புரோக்கர்கள் மூலமாகவும், அவ்வலுவலகத்திற்கு எதிரே அமைந்துள்ள KOVAI PLANNERS என்ற பெயரில் டைப் ஆபீஸ் மற்றும் ஜெராக்ஸ் கடை வைத்து Building / Layout Plan & Approval வேலைகளை செய்து கொடுக்கும் அக்கடையின் உரிமையாளர் மூலமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் கையூட்டு பெற்று வருவது தொடர்பாக நம்பத்தகுந்த தகவல் கிடைக்கப்பெற்றது. அதனடிப்படையில் மேற்படி அலுவலகத்தை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.10/2024/A2, நாள் 23.10.2024-ன் படி சிறப்பு துணை ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட நான், கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர்கள் மற்றும் காவல் குழுவினருடன் அன்று மாலை சுமார் 3.00 மணி முதல் மேற்படி அலுவலகத்தை கண்காணித்துக் கொண்டிருந்தபோது, மேற்படி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு வந்தவர்களில் ஒருசிலர் ஜெராக்ஸ் கடைக்கு கையில் கோப்புக்களுடன் வருவதும் போவதுமாக இருந்தனர். அதனடிப்படையில் மாலை, சுமார் 4.00 மணியளவில் திடீர் தணிக்கை செய்யும்பொருட்டு நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர்கள் மற்றும் காவல் குழுவினருடன் மேற்படி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக வளாகத்திற்குள் நுழைந்து அதன் தரைதளத்தில் இருந்த பதிவறையினை பார்வையிட அதில் எவருமில்லை. பின்னர் இதன் முதல் தளத்தில் அமைந்துள்ள மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலத்தின் வரவேற்பு பகுதியில் பின்னால் பெயர்கேட்டுத்தெரிந்துகொண்ட செக்யூரிட்டி திரு.ரகுநாத் என்பவர் அமர்ந்திருந்தார். அதனைத்தொடர்ந்து மேற்படி அலுவலகத்திற்குள் நுழைந்தபோது உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர் (பொ) என்று எழுதப்பட்டிருந்த அறை மூடியிருந்தது. அதனால் அதன் பக்கவாட்டில் கண்காணிப்பாளர் என்று எழுதப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்தவரை விசாரிக்க அவரது பெயர் திரு.க.பிரகாஷ் எனவும் அவரருகில் திட்ட உதவியாளர் என்று எழுதப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்தவரை விசாரிக்க அவரது பெயர் திரு.ஜெ.குருபிரசாத் என்பதும் தெரியவந்தது. அவர்களிடம் நான் என்னையும் என்னுடனிருந்த சோதனைக்குழுவினரையும் அறிமுகப்படுத்திக் கொண்டு திடீர் சோதனை செய்ய வந்துள்ள விபரம்

தெரிவிக்கப்பட்டது. பின்னர் மேற்படி திரு.குருபிரசாத் என்பவரிடம் உதவி இயக்குநர் பற்றி விசாரிக்க உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர் (பொ) ஆக பணிபுரியும் திரு.ரா.ராஜகுரு அவர்கள் கள ஆய்விற்காக சென்றுள்ளதாக விபரம் தெரிவித்தார். அதனைத்தொடர்ந்து அவ்வலுவலத்திலிருந்தவர்களை அவரவர் வேலைகளை கவனிக்கும்படி அறிவுறுத்தி பின்னர் சோதனைக்குழுவினரின் ஒருபகுதினரை மட்டும் அழைத்துக்கொண்டு அவ்வலுவலகத்தில் இருக்குமாறு அறிவுறுத்திவிட்டு மற்றொரு பிரிவினருடன் அவ்வலுவலகத்தின் எதிரே அமைந்திருந்து KOVAI PLANNERS என்ற பெயரில் டைப் ஆபீஸ் மற்றும் ஜெராக்ஸ் கடைக்குள் சென்று அங்கிருந்தவர்களிடம் மேற்படி கடையின் உரிமையாளர் விபரம் கேட்டபோது அவ்வலுவலத்தின் உட்புறமிருந்த கேபினில் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தவரை காண்பித்தனர். அதனைத்தொடர்ந்து மேற்படி கேபினுக்குள் நுழைந்து அங்கிருந்தவர்களிடம் நான் என்னையும் என்னுடனிருந்த விஜிலென்ஸ் குழுவினரையும் அறிமுகப்படுத்தியபோது அங்கிருந்தவர்களில் ஒருவர் தனது பெயர் வீரா (எ) பொன்னப்பன் என்றும் அவர் மேற்படி ஜெராக்ஸ்கடையின் உரிமையாளர் என்றும் தெரிவித்தார். மேலும் திரு.வீரா என்பவரின் முன்னால் அமர்ந்திருந்தவரை விசாரிக்க அவரது பெயர் திரு.ஜனார்த்தனன் என்பதும் தெரியவந்தது. மேலும் மேற்படி திரு.வீரா என்வரின் மேசையின் மீது கட்டுக்கட்டாக பணம் வைக்கபட்டிருந்தது. அப்பணம் குறித்து திரு.வீரா என்பவரை விசாரித்போது, மேற்படி திரு.ஜனார்த்தனன் என்பவரது வணிக கட்டிட திட்ட அனுமதிக்காக விண்ணப்பத்தினை தான் விண்ணப்பித்துள்ளதாகவும் அதற்காக கட்டணத்தை தான் ஆன்லைனில் செலுத்தியுள்ளதாகவும் அந்த தொகையை திரு.ஜனார்த்தனன் சிறிது நேரத்திற்கு முன்பு தன்னிடம் கொடுத்ததாகவும் அதை வாங்கி சரிபார்ப்பதற்காக தனது மேசையின்மேல் வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் மேற்படி மேசையின் மேல் திரு.ஜனார்த்தனன் அவர்களது வணிக கட்டிட திட்ட அனுமதி தொடர்பாக ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த ஒரு தாளின் நகல் இருந்தது. அதனை பார்வையிட அதில் கட்டண விவரங்களும் DTCP Office Approval DS Charge Rs.4,08,000/- என்றும் எழுதப்பட்டிருந்தது.

அதன் அசல் குறித்து திரு.வீரா அவர்களை விசாரிக்க அவர் scribbling pad-ல் எழுதி அதை திரு.ஜனார்த்தனன் அவர்களுக்கு WhatsApp-ல் போட்டோ எடுத்து அனுப்பிய பின் அந்த பேப்பரை கிழித்துவிட்டதாக தெரிவித்தார். இது குறித்து திரு.ஜனார்த்தனன் மற்றும் திரு.வீரா ஆகியோர்களுக்கு இடையே ஆன WhatsApp image ஒப்பிட்டு பார்க்கப்பட்டு ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. இதுசம்மந்தமாக மேற்படி திரு.ஜனார்தனன் என்பவரை விசாரிக்க அவர் தனது கட்டிடத்தின் திட்ட அனுமதிக்காக சுமார் 12,00,000/- தொகையை நான்கு தவணைகளாக மேற்படி வீராவின் வங்கிக்கணக்கிற்கு தான் செலுத்திவிட்டதாக தெரிவித்து தன்னிடமிருந்த தனது வணிக கட்டிடடத்தின் திட்ட அனுமதியினை கொடுத்தார். அதனை பார்வையிட மேற்படி திட்ட அனுமதியானது உதவி இயக்குநர் அவர்களால் 23.10.2024-ம் தேதி காலை 08.12 மணியளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது. மேலும் மேற்படி திரு.வீரா மற்றும் திரு.ஜனார்த்தனன் ஆகியோர்களது பதில்கள் முன்னுக்குபின் முரணாக இருந்ததினால் அதுகுறித்து மேற்கொண்டு விசாரிப்பதற்காகவும், அவ்விடம் தனியாருக்கு சொந்தமானது என்பதாலும், அதன் எதிரே அமைந்திருந்த மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் வைத்து விசாரிப்பதற்கு திரு.வீரா மற்றும் திரு.ஜனார்த்தனன் ஆகியோர்களது சம்மதித்ததின் பேரில் அங்கிருந்து அவர்களுடனும், திரு.வீரா என்பவரின் மேசையின் மேல் வைக்கப்பட்டிருந்த பணம் மற்றும் கட்டணக்குறிப்புகள் அடங்கிய தாள் ஆகியவற்றுடன் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு சென்று, திரு.ஜனார்த்தனன் என்பவரது வணிக கட்டிட திட்ட அனுமதி தொடர்பான விண்ணப்பம் மற்றும் அனுமதி குறித்து விசாரிக்க அவ்வலுவக இணை இயக்குநர் திரு.ராஜகுரு அவர்களை அவ்வலுவகத்திற்கு வருமாறு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து அவ்வலுகத்தின் தரைத்தளத்தில் உள்ள பதிவறை மற்றும் அனைத்து இருக்கைகளும் சோதனை செய்யப்பட்டதில் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் அவ்வலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து அலுவலர்களிடம் உள்ள பணம் குறித்து விசாரிப்பதற்க்காக முதலில் அலுவலக கண்காணிப்பாளர் திரு.பிரகாஷ் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து

பணம் ரூ.40/-யை எடுத்து ஆஜர் செய்தார். பின்னர் திட்ட உதவியாளர் திரு.ஜெ.குருபிரசாத் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்த பணம் ரூ.500/-யை எடுத்து ஆஜர் செய்தார். அதனை தொடர்ந்து தொழில்நுட்ப பிரிவு-2ல் வரைவாளர் நிலை-3, திருமதி.பாரதி என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.485/-யை எடுத்து ஆஜர் செய்தார், அளவர்/உதவி வரைவாளர் திருமதி.கௌதமி என்பவரை விசாரிக்க அவர் தன்னிடம் பணம் ஏதுமில்லை என்று தெரிவித்தார். அளவர்/உதவிவரைவாளர், திரு.பூபதி என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.250/-யை எடுத்து ஆஜர் செய்தார். தொழில்நுட்ப பிரிவு-4 மேற்பார்வையாளர் திருமதி.ஜெபஸ்திரோசாலி என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.400/-யை எடுத்து ஆஜர் செய்தார். வரைவாளர் நிலை-3 திரு.வேல்குமார் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.162/-யை எடுத்து ஆஜர் செய்தார். வரைவாளர் நிலை-3 திரு.பாலமுருகன் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.970/-யை எடுத்து ஆஜர் செய்தார். அளவர்/உதவி வரைவாளர் திரு.கார்த்திக் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.530/-யை எடுத்து ஆஜர் செய்தார். மேற்பார்வையாளர் திருமதி.கிரிஜா என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.237/-யை எடுத்து ஆஜர் செய்தார். தொழில்நுட்ப பிரிவு-3 திட்ட உதவியாளர் திருமதி.பிரியஸ்ரீ என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.510/-யை எடுத்து ஆஜர் செய்தார். வரைவாளர் நிலை-3 திரு.பாபு என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.500/-யை எடுத்து ஆஜர் செய்தார். அளவர்/உதவிவரைவாளர், திருமதி.திவ்யா என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.500/-யை எடுத்து ஆஜர் செய்தார். தொழில்நுட்ப பிரிவு-1 திட்ட உதவியாளர் திருமதி.மணிமொழி என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.4040/-யை எடுத்து ஆஜர் செய்தார். வரைவாளர் நிலை-3 திருமதி.வனிதா என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.300/-யை எடுத்து ஆஜர் செய்தார். வரைவாளர் நிலை-3 திரு.பாண்டீஸ்வரன் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.90/-யை எடுத்து ஆஜர் செய்தார்.

அளவர்/உதவிவரைவாளர் , திரு.பார்த்தீபன் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.750/-யை எடுத்து ஆஜர் செய்தார். அமைச்சுப்பிரிவு மேல்நிலைக்கணக்கர் திரு.கார்த்திகேயன் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.300/-யை எடுத்து ஆஜர் செய்தார். உதவியாளர் திரு.அசோக்குமார் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.750/-யை எடுத்து ஆஜர் செய்தார். நீலபட நகல் எடுப்பவர் திரு.நாகராஜன் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.500/- யை எடுத்து ஆஜர் செய்தார். களப்பணி உதவியாளர் திரு.கர்ணன் என்பவரை விசாரிக்க அவர் தன்னிடமிருந்து பணம் ரூ.500/-யை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி அலுவலர்களின் கையிருப்பு பணம் குறித்து விசாரித்தபோது, அவர்களது அன்றைய கைசெலவு போக வைத்திருந்த மீதி பணம் என்று தெரிவித்தனர். அதுகுறித்து அவ்வலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பணப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு பார்த்தபோது திரு.குருபிரசாத் மற்றும் திருமதி.மணிமொழி ஆகிய இருவரைத்தவிர மற்றவர்களின் கையிருப்பு பணம் குறித்த பதிவுகள் மற்றும் விளக்கங்கள் சரியாக இருந்ததால் அவரவர் பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பணம்பற்றிய குறிப்பினை கையிருப்பு பதிவேட்டில் குறிப்பிடாதது குறித்து திரு.குருபிராசாத்திடம் விசாரித்த போது அவர் தான் 21.10.2024-ம் தேதி வைத்திருந்த ரூ.1000/-ல் செலவு போக மீதி தொகையான ரூ.500/- தனது Shoulder Bag-ல் வைத்திருந்ததை மறந்துவிட்டதாகவும் அதனால் கடந்த இரண்டு நாட்களாக கையிருப்பு பதிவேட்டில் குறிப்பு எதுவும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்தார். பின்னர் திருமதி.மணிமொழி வைத்திருந்த ரூ.4,040/-யை குறித்து விசாரிக்க அவர் 22.10.2024-ம் தேதி அவர் வைத்திருந்த ரூ.4,150/-ஐ குறித்து பணப்பதிவேட்டில் குறித்திருந்ததாகவும், தனது செலவு போக வைத்திருந்த ரூ.4040/- இன்று அலுவலகம் வந்தபின்னர், பணப்பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்று தெரிவித்தார். மேற்படி பணம் அவர்களது சொந்தபணம் என்று தெரிவித்ததால் அப்பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனைதொடர்ந்து மேற்படி Kovai Planners-ன் உரிமையாளர் திரு.வீரா மற்றும் வணிக கட்டிட திட்ட அனுமதி விண்ணப்பதாரர்

திரு.ஜனார்த்தனன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரிக்கப்பட்டது. விசாரணையின்போது திரு.வீரா என்பவர் தான் மேற்படி வணிக கட்டிட திட்ட அனுமதி தொடர்பாக அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணத்தில் ஒரு பகுதியை தனது சொந்தபணத்தில் செலுத்தியதாகவும், அதனால் அத்தொகையை திரு.ஜனார்த்தனன் அவர்களிடமிருந்து பெற்று கொண்டதாகவும் தெரிவித்தார். அது குறித்து திரு.ஜனார்த்தனன் அவர்களிடம் கேட்டபோது, அவர் மேற்படி திட்ட அனுமதிக்காக ஏற்கனவே சுமார் ரூ.12,00,000/-ஐ திரு.வீராவின் வங்கி கணக்கிற்கு செலுத்திவிட்டதாகவும், பாக்கி தொகை எதுவும் இல்லை எனவும் தெரிவித்தார். மேலும் மேற்படி திரு.வீரா மாநகராட்சிக்கு பணம் செலுத்தவேண்டும் என்றும் அதற்க்காக ரூ.4 லட்சம் முதல் ரூ.5 லட்சம் வரை செலவாகும் என்றும், அதனால் அதை கொண்டுவரும்படி தெரிவித்ததால்தான் மேற்படி தொகை ரூ.4,00,000/-ஐ தான் திரு.வீரா அவர்களிடம் கொடுத்ததாக தெரிவித்தார். அத்தொகையை எண்ணிபார்த்தபோது அதில் (1).500 X 600 = 3,00,000/-, (2).200 X 295 = 59,000/-, (3).100 X 271 = 27,100/- மற்றும் (4).50 X 200 = 10,000/- ஆக மொத்தம் ரூ.3,96,100/- மட்டும் இருந்தது. மேலும் அது குறித்து திரு.ஜனார்த்தன் அவர்களிடம் கேட்க அவர் ரூ.4 லட்சம் என்று நினைத்து தனது வீட்டில் வைத்திருந்த பணத்தை எண்ணிப்பார்க்காமல் எடுத்து வந்த விபரத்தை தெரிவித்தார். மேலும் மேற்படி வணிக கட்டிட திட்ட அனுமதி தொடர்பாக அரசுக்கு செலுத்தவேண்டிய தொகைகள் குறித்து அவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ஆவணங்களை திரு.குருபிரசாத் அவர்களின் உதவியுடன் பார்வையிட்டதில் கூராய்வுக்கட்டணமாக கடந்த 31.05.2024-ல் ரூ.3508/-, Open Space reservation (OSR) தொகையாக கடந்த 16.10.2024-ல் ரூ.6,63,637/- மற்றும் இதர கட்டணங்கள் ரூ.4,82,297/-ஐ கடந்த 21.10.2024-லும் ஆக மொத்தம் ரூ.11,49,442/-ஐ செலுத்தி உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் திரு.ஜனார்த்தனன் அவர்கள் மேற்படி வணிக கட்டிட திட்ட அனுமதி தொடர்பாக சுமார் 12 லட்சத்தை 21.01.2024-ம் தேதியில் டாடபாட் கிளையில் உள்ள தனது கனராவங்கி கணக்கு எண்.61312200011210-ன் காசோலை எண்.530150 மூலம் ரூ.2,00,000/-,

17.02.2024-ம் தேதி NEFT மூலம் ரூ.1,00,000/-மும், கடந்த 12.03.2024 மற்றும் 17.04.2024 ஆகிய தேதிகளில் காந்திபுரம் கோட்டாக் மகேந்திரா கிளையில் உள்ள தனது வங்கி கணக்கு எண்.3448049211-லிருந்து RTGS மூலம் ரூ.7,00,000/- மற்றும் ரூ.2,00,000/-ஆக மொத்தம் ரூ.12,00,000/-ம் செலுத்திவிட்டதாக தெரிவித்து, அது சம்பந்தமாக அவரது செல்போனில் சம்பந்தப்பட்ட தேதிகளில் வந்திருந்த குறுஞ்செய்திகளை காண்பித்தார். அவைகள் சரிபார்க்கப்பட்டு ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. மேலும் அவரது திட்ட அனுமதிக்கான அனைத்து தொகையையும் அவர் திரு.வீரா அவர்களுக்கு செலுத்திவிட்டதாகவும், தன்னிடம் மேற்படி ரூ.3,96,100/-ஐ வாங்கிய பிறகுதான் திரு.வீரா அவர்கள் அவரிடமிருந்த வணிக கட்டிடத்திற்கான திட்ட அனுமதி ஆணையினை தன்னிடம் கொடுத்ததாகவும் தெரிவித்தார். இதற்கிடையில் அவ்வலுவலகத்தில் உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர் (பொறுப்பு) ஆக பணிபுரியும் திரு.ரா.ராஜகுரு அவர்கள் மாலை சுமார் 6.10 மணியளவில் அவ்வலுவலகம் வந்தடைந்தார், அவரிடம் நான் என்னையும், என்னுடன் வந்திருந்த கோவை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவைச் சேர்ந்த சோதனைக் குழுவினர்களையும் அறிமுகப்படுத்தி கொண்டு, திடீர் சோதனை நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து வணிக கட்டிட திட்ட அனுமதி தொடர்பாக திரு.ஜனார்த்தனன் அவர்களின் விண்ணப்பம் தொடர்பாக செலுத்தப்பட்ட அரசுக் கட்டண விபரங்களை பார்வையிட்டதிலிருந்தும், திரு.ஜனார்த்தனன் மற்றும் திரு.வீரா ஆகியோர்கள் மேற்படி தொகைக்காக தெரிவித்த விளக்கங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு முன்னுக்குபின் இருந்ததாலும், உரிய விசாரணைக்கு பிறகு திரு.வீரா அவர்களிடமிருந்து கைபற்றப்பட்ட பணம் ரூ.3,96,100/-ஐ 23.10.2024ஆம் தேதி காலை 08.12 மணிக்கு மேற்படி வணிக கட்டிட திட்ட அனுமதி வழங்கியதற்காக அவ்வலுவலக அதிகாரிக்கு கொடுப்பதற்காக திரு.வீரா அவர்களால் திரு.ஜனார்த்தனன் அவர்களிடமிருந்து பெறப்பட்ட பணம் லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி தொகை ரூ.3,96,100/-யும், திரு.வீராவின் மேசையின் மீது வைக்கப்பட்டிருந்த மேற்படி கட்டண விபரங்கள் அடங்கிய

தாளின் நகலையும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திரு.வீரா மற்றும் திரு.ஜனார்த்தனன் ஆகியோர்களை நான் தனித்தனியே விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தேன். மேலும் திரு.ஜனார்த்தனன் அவர்களது வணிக கட்டிட திட்ட அனுமதி மற்றும் கட்டணங்களுக்கான 3 எண்ணிக்கையிலான ரசீதுகள், அது தொடர்பாக அவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் மனை/மனைபிரிவு ஜூன்-2024 என்ற பதிவேட்டின் பக்க எண்.330 மற்றும் 331, திட்ட அனுமதி பதிவேடு ஜூன் 2024-ன் பக்கம் எண். 342 மற்றும் 343 ஆகியவற்றின் நகல், அக்டோபர் மாத வருகைப்பதிவேட்டின் பதிவிற்கான நகல் மற்றும் 19.10.2024 முதல் 23.10.2024 தேதிகள் வரையிலான தனிநபர் பணப்பதிவேட்டின் நகல் ஆகியவற்றை உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர் (பொறுப்பு) திரு.ராஜகுரு அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.ஜனார்த்தனன் மற்றும் திரு.வீரா ஆகியோர்களுக்கு இடையே ஆன WhatsApp Image ஆனது பிரிண்ட் எடுக்கப்பட்டு அதில் வீரா மற்றும் திரு.ஜனார்த்தனன் ஆகியோர்களிடம் அவரவர் சான்றொப்பம் பெறப்பட்டு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் சோதனை நடவடிக்கைகள் 23.10.2024-ம் தேதி இரவு 8.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இன்று 24.10.2024-ம் தேதி அதிகாலை 3.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் அந்த திடீர் சோதனை நடவடிக்கைகளானது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட அலுவலக மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அலுவலக பிரிண்டரில் பிரிண்ட் எடுக்கப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளையும் இத்துடன் இணைத்துள்ளேன். அதில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து விவரங்களையும், குறிப்பிட்டுள்ளேன். மேலும் திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,96,100/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், திரு.வீரா மற்றும் திரு.ஜனார்த்தனன் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். எனவே மேற்கண்ட முறைகேடுகளில் தொடர்புடையதாக கருதப்படும் உதவி இயக்குநர் / இணை இயக்குநர் (பொறுப்பு), கோவை மாவட்ட நகர் ஊரமைப்பு திரு.R.ராஜகுரு அவர்கள் மற்றும்

கோவை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு எதிரே அமைந்துள்ள KOVAI PLANNERS என்ற ஜெராக்ஸ் கடையின் உரிமையாளர் திரு.V.வீரா (எ) பொன்னப்பன், S/o.வீரக்கண்ணு ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இணைப்பு:- 1).திடீர் சோதனை நடவடிக்கைகள், 2).கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,96,100/-, 3).கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் 4).பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள். (Sdxxxx) V.P.சந்திரன், தனி வட்டாட்சியர்/ உதவி பங்கீட்டு அலுவலர், சரகம்-1, சிறப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர்,மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயம்புத்தூர். Respected Madam, I have received the complaint on 24.10.2024 at about 13.30 hrs and registered a case in Coimbatore V&AC Cr.No.12/2024/AC/CB u/s.7(b), 7(b) r/w.12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 at about 14.00 hrs (Sd. xxxxxx) R.எழிலரசி, 24/10/2024 Inspr. V&AC, CBE. மேற்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் சிறப்பு துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலங்கள் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

R.எழில் 24/10/2024

(R.எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.